பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 18 சனிக்கிழமை (04.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 008

# இலங்கையைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறது பிரிட்டிஷ் அரசு

## அமைச்சர் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெம்பர் 04

இலங்கையை இரண்டாகப் பிளவுபடச் செய்வதற்கும், உலகின் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் நாடாகவும் மாற்றுவதற்கு பிரிட்டன் செயற்படுகிறது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பொறியியல், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார்.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்துக்கு முன்பாக நேற்று நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய அமைச்சர் மேற்கண்ட குற்றச் சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பிரிட்டிஷ் அரசு இவ்வாறானதொரு நிகழ்வைத் திட்டமிட்டே நடத்தியுள்ளது. பிரிட்டிஷ் அரசு இலங்கையில் பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு முனைகிறது. அந்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு நெடுங்காலமாக ஆதரவு வழங்கியும் வந்துள்ளது.

உலகில் பயங்கரவாதத்தை (12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

உள்நாடு 2
சபையில் நேற்றும் கூச்சல் குழப்பம்

குடாநாடு 7
ஜனாதிபதி செயலக ஏற்பாட்டில் 'நம்ம ஊரில் நத்தார்'

உலகம் 3
சிக்கினார் பிரிட்டிஷ் அமைச்சர் லியாம் பொக்ஸ்



லண்டன்- ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த உரை ரத்துச்செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## மீசாலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இளைஞன் ஒருவர் நேற்றுப் பலி!

### சிப்பாய் சுய பாதுகாப்புக்குச் சுட்டதாகத் தெரிவிப்பு

தென்மராட்சி, டிசெ. 04

மீசாலை பொது நூலகத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் 03.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் படையினரின் சூட் டுக்கு இலக்காகி பொது மகன் ஒருவர் உயிரிழந்தார். அவரது சடலம் நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் சாவகச்சேரி பொலிஸாரால் ஒப் படைக்கப்பட்டது நேற்று நள்ளிரவு வரையில் சடலம் அடையாளம் காணப்படவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

**அன்பான வாசகர்களே!**

**எதிர்பாராத விதமாக திடீரென ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக, உதயனின் பக்கங்களை (24) பன்னிரண்டாகக் குறைக்க நேர்ந்துவிட்டது. தயவுடன் பொறுத்துக்கொள்க. நாளை வழமையான எண்ணிக்கை கொண்ட பக்கங்களில் உதயன் வெளிவருவான்.**

**முன்னோடி வெளியீடு 02 ஞாயிறு இதழுடன்.**

**- நிர்வாகத்தினர்.**

## போர்க்குற்றம் புரிந்தோருக்கு எதிராக லண்டனில் நேற்று வழக்குத் தாக்கல்

கொழும்பு, டிச. 04

போர்க்குற்றம் புரிந்துள்ளனர் எனக் கூறப்படும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான நபர்கள் சிலருக்கு எதிராக லண்டன் வெஸ்ற் மினிஸ்ரர் நீதிமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நண்பகல் பிடியாணை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில், உலகத் தமிழர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவு இன்று

கொழும்பு, டிசெ. 4

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தர)பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும் எனப் பரீட்சைத்திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

பரீட்சை முடிவுகளை இறுதியாக்கும் செயற்பாடு நள்ளிரவுக்குப் பின்னரும் தொடர்ந்தது என்று இன்று பகல் முடிவுகள் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## வடக்கு, கிழக்கு இணைந்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு

### நல்லிணக்க ஆணைக்குழு முன் யோகேஸ்வரன் அடிகளார் சாட்சியம்

திருகோணமலை, டிசெ.04

வடக்கையும் கிழக்கையும் மீண்டும் இணைப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டமுடியும். இதுவே அந்த பிரதேச மக்களின் விருப்பும் அவாவும் ஆகும்.

அந்த மாவட்டங்களுக்கு வெளியில் உள்ள மக்களே இணைப்பை எதிர்க்கின்றனர். வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்தையே பிரதேச மக்கள் விரும்புகின்றனர்.

திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன் சாட்சியம் அளித்த அருட்திரு. யோகேஸ்வரன் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடிகளார் சாட்சியம் அளிக்கையில் நாட்டில் நிலவும் இனமுரண்பாடுகளுக்குத் தீர்வு ஏற்பட வேண்டுமானால் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணமாக இருக்க வேண்டும். அதன் மூலமே நிரந்தர தீர்வை எட்டமுடியும்.

இணைந்த மாகாணமாக இல்லாவிட்டால் எதிர்காலத்தில் சிக்கல்களும் முரண்பாடுகளும் தோன்றும். அந்த நிலை தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### 186 பேர் பதிவு செய்திருந்த போதும்

## திருமலையில் நல்லிணக்க ஆணைக்குழு முன் நேற்று மிகச் சிலரே நேரடியாக சாட்சியம்

திருகோணமலை, டிசெ.04

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு நேற்று திருகோணமலையில் இடம்பெற்ற போது கைதான மற்றும் காணாமற் போனவர்களின் உறவுகளை மீட்டுத் தருமாறு பெண்கள் பலரும் தேம்பித் தேம்பி அழுதவாறு சாட்சியம் அளித்தனர்.

ஆணைக்குழுவின் அமர்வு காலையில் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால், சாட்சியம் அளிக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சனல் – 4 போர்க் குற்றக் காட்சிகள் தொடர்பாக புதிய விசாரணைக்கு ஐ.நா. வலியுறுத்து!

கொழும்பு, டிசெ.04

வன்னியில் நடந்த இறுதிப் போரின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆதாரங்கள் தொடர்பாக புதிய விசாரணையை ஆரம்பிப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவனம் செலுத்தியுள்ளது.

சனல் 4 வெளியிட்டுள்ள காட்சிகள் அதிர்ச்சி தரக் கூடியவை என்றும், இந்தக் காட்சிகள் இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் [illegible] விசாரணையை மேற்[illegible] தற்குப் பொருத்தமானவை என்றும் ஐ.நாவின் விசேட பிரதிநிதி கிறிஸ்டொப் ஹெயின்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலிருந்து ஒலிபரப்பாகும் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம், நிர்வாண நிலையில் [illegible] கொல்வது (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மக்களின் நன்மதிப்பை பெற்ற ஓரே ஒரு டையில் காட்சியறை

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD
212, Palaly Road, Jaffna.
Tel : 212220033 / 212220044

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050



Hayleys
047, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபையில் நேற்றும் கூச்சல், குழப்பம் ஜயலத் பேச முற்பட்டபோது ரகளை

கொழும்பு, டிசெ. 04

ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பான விவகாரம் மீண்டும் சபையில் அமளிதுமளியை ஏற்படுத்தியது.

எதிர்க்கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு சபையில் தன்னிலை விளக்கம் அளிக்க சபாநாயகர் அனுமதித்தார்.

சபாநாயகரின் பணிப்புரையை ஏற்க மறுத்த பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் சபாநாயகரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக பரிசீலனை செய்ய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க கொள்கை அளவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்தார்.

லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கலந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான விவகாரம் நேற்றும் சபையில் பெரும் அமளிதுமளியையும், கூச்சல் குழப்பங்களையும் ஏற்படுத்தியது.

டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் சபையில் தெளிவுபடுத்தி தன்னிலை விளக்க உரை ஒன்றை நிகழ்த்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அனுமதி அளித்தார்.

ஆனால், ஆளும் கட்சி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ஆட்சேபனை எழுப்பி கூச்சலிட்டனர்.

டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு பேச இடமளிக்கக் கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்ததுடன் உறுப்பினருக்கு எதிராக மோசமான வார்த்தைகளைப் பிரயோகித்துக்கொண்டே இருந்தனர். இவர்களுடைய கூச்சல் குழப்பங்களைக் கட்டுப்படுத்த சபாநாயகர் பெரிதும் சிரமப்படவேண்டி இருந்தது.

இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு இடையில் ஆளும் கட்சி உறுப்பினரான உதித்த லொக்கு பண்டார, ஜயலத் ஜயவர்த்தனவை நோக்கிப் பாய்ந்து வந்தார். அப்போது எதிர்க்கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர எழுந்தார்.

இதனை அவதானித்த அமைச்சர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் முஷ்டியை முறுக்கிக்கொண்டு எதிரணி பக்கமாகப் பாய்ந்து வந்தனர். சபாநாயகர் கடுமையாக எச்சரிக்கை செய்து அவர்களைத் தடுத்து விட்டார். ஆளும்தரப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவை பேச விடமாட்டோம் என துள்ளிக் குதித்தனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களுக்குப் போய் அமர்ந்துகொள்ளாவிட்டால் சபையை ஒத்திவைக்க நேரிடும் என சபாநாயகர் எச்சரித்தார்.

இதனைத் தொடர்ந்து உறுப்பினர்களும், அமைச்சர்களும் தத்தமது ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர். ஆனால், பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க தொடர்ந்தும் கூச்சல் இட்டவாறே எழுந்து நின்றார்.

இதனால் பிரதி அமைச்சரை சபையை விட்டு வெளியேறும்படி சபாநாயகர் உத்தரவிட்டார். பிரதி அமைச்சர் தாமாக வெளியே செல்லாவிட்டால் தொடர்ந்து ஒருவார காலத்துக்கு சபை அமர்வுகளுக்கு வருவதைத் தடைசெய்ய நேரிடும் எனகடுமையாக எச்சரித்தார்.

இதனால் வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டே சபையை விட்டு பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க வெளியேறினார்.

இவ்வேளையில், சபாநாயகர் மிகக் கடுமையான தொனியில், "சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் சிறப்புரிமைகளையும் பாதுகாக்க வேண்டியது எனது கடமை. எனவே, ஜயலத் ஜயவர்த்தன தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க இடமளிக்கவேண்டும். இதனை எவராலும் தடுக்க முடியாது" என்றார்.

இதனைத் தொடர்ந்து டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தன்னிலை விளக்க உரையை நிகழ்த்தினார்.

அவர் பேசியதைத் தொடர்ந்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவும் இவ்விடயம் தொடர்பாக உரையாற்றினார்.

அதன்பின் ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்ப முயன்றார்.

அதற்கு இடமளிக்காத சபாநாயகர், கௌரவ அஸ்வர் எல்லா நேரங்களிலும், ஒழுங்குப் பிரச்சினை, ஒழுங்குப் பிரச்சினை என்று கூறி சபையின் அமைதியை கெடுத்துக் கொண்டே இருக்கின்றார். இதனைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்று கடுமையான தொனியில் எச்சரித்தார்.

இதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப இடமளிக்காது இந்த விவகாரத்தை ஒரு விவாதமாக்க வேண்டாம் என்றும் சபாநாயகர் கூறினார். (ஓ-சி)

## ஜயலத் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற தெரிவுக்குழு

கொழும்பு, டிசெ.4

லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. கலந்துகொண்டார் என்று கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்த கொள்கையளவில் தாம் இணக்கம் தெரிவிக்கின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

அதேபோல், இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக ஐ.தே.கட்சியும், தனியான விசாரணை ஒன்றை நடத்தும் என்று அவர் மேலும் கூறினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜயலத் ஜயவர்த்தன மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு தொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்துவதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம்.

ஜயலத் வெளிநாடுகளில் யார் யாருடன் பேசினார். எப்படி வெளிநாடு பயணமானார் போன்ற தகவல்களைத் திரட்டிக் கொள்ளுங்கள். அரசிடம் இருந்தும் தகவலைப் பெறுங்கள்.

இத்தாலி மிலான் நகர் மற்றும் லண்டனில் தான் சந்தித்தவர்களின் பெயர் விவரங்களை வழங்கத் தயாராக இருப்பதாக ஜயலத் கூறியுள்ளார். அந்த நாடுகளுக்குச் சென்று தகவல்களை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.

ஜயலத் ஜயவர்த்தன மீது அரசு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மையும் இல்லை. குற்றச்சாட்டுநிரூபிக்கப்படவேண்டும்.

சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பும் இணைந்து மிலான் நகரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. நாம் எல்லா விவரங்களையும் சபாநாயகருக்கு வழங்குவோம். சந்தித்துப் பேசியவர்களின் பெயர்களை நாம் வழங்குவோம் - என்றார்.

அப்போது குறுக்கீடு செய்த அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன இந்த விசாரணைக்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்க நீங்கள் இணங்குகிறீர்களா என்று ரணிலிடம் கேட்டார்.

கொள்கையளவில் நாம் இணங்குகின்றோம். ஆனால், அதற்கு முன் இந்தக் குழுவின் செயற்பாடு தொடர்பான நியாயத் தன்மையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று ரணில் கூறினார்.

## ஜி.சீ.ஈ. பரீட்சை வானொலியில் இன்று கலந்துரையாடல்

எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக விருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை தொடர்பான கலந் துரையாடல் இன்று பிற்பகல் 3 மணி தொக்கம் 4.30 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நடைபெறவுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் மாணவர்கள் மற்றும் பெற்றோர் பரீட்சை தொடர்பாக தொலைபேசி மூலம் கேட்கும் விளக்கங்களுக்கு விடை அளிக்கப்படவுள்ளதுஎன்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் ஆ.சிவலிங்கம் தெரிவித்தார். (ஓ-11)

## ஜயலத்தை தப்பவிடமாட்டோம் சபையில் தினேஷ் ஆவேசம்

கொழும்பு, டிசெ.04

ஜயலத் ஜயவர்தன எம்.பி. இந்த நாட்டுக்கு எதிராகக் குற்றம் செய்துள்ளார். நாம் அவரை தப்பவிடமாட்டோம். இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக நாம் நாடாளுமன்றத்தை விட்டு வெளியில் செல்லவும் தயார் -

- இப்படி அரசின் பிரதம கொரடா தினேஷ் குணவர்தன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

தினேஷ் குணவர்தன தன் மீது சுமத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாகவும், அரச உறுப்பினரான தன்னைத் தாக்க முற்பட்டமை தொடர்பாகவும் ஜயலத் ஜயவர்தனநேற்றுக் காலை சபையில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதற்குப் பதிலளித்து உரையாற்றும்போதே தினேஷ் குணவர்தன இவ்வாறு கூறினார்.

## 108 குடும்பங்கள் நேற்று முல்லைத்தீவில் மீள்குடியமர்வு

கொழும்பு, டிசெ.04

முல்லைத்தீவு மாவட்டத்தில் முறிகண்டிப் பகுதியில் நேற்று 108 குடும்பங்களைச் சேர்ந்த 357 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர் என மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இது குறித்து, அவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா-மெனிக்பாம் முகாமிலிருந்து இன்று கொண்டுவரப்பட்ட 108 குடும்பங்களைச் சேர்ந்த 357 பேர் முறிகண்டிப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் எஞ்சியுள்ள சுமார் ஆறாயிரம் குடும்பங்களை இந்த மாத இறுதிக்குள் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதற்காக நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப் பட் டுள்ளன.

# வடக்கு - கிழக்கில் உள்ள குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

### அரச முகவர் நிறுவனங்களின் குழு வலியுறுத்து

கொழும்பு, டிசெ.04

வடக்கு, கிழக்கில் இயங்கி வரும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென அரசாங்க முகவர் நிறுவனங்களின் குழு வலியுறுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் இயங்கி வரும் தனியார் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், குற்றச் செயல்களில் ஈடுபடாதவர்களை விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸின் தலைமையில் அரசாங்க முகவர் நிறுவனங்களின் குழு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகளை அமுல்படுத்தும் நோக்கில் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்கள் பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்துவதாகவும் இந்த ஆயுதக் குழுக்கள் பெரும் தடையாக அமைந்துள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆயுதக் குழுக்கள் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல்கள், கப்பம் கோரல், கொலை போன்ற குற்றச் செயல்களில் இந்த ஆயுதக் குழுக்கள் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் இதுவரையில் மூவாயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# பத்திரிகைகளுக்கு எதிராக நடவடிக்கை என்கிறார் ஜயலத்

கொழும்பு, டிசெ.04

லண்டனில் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார் என செய்தி வெளியிட்ட பத்திரிகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போகிறார் என ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நாளை மறுதினம் பத்திரிகைச் முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளார் என அவர் சொன்னார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்ற வெனலண்டன் ஹீத்துரு விமான நிலையத்தில் இறங்கும்போது அங்குள்ள தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியது தெரிந்ததே. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பி, கலாநிதி விக்கிரம பாகு கருணாரட்ன ஆகியோர் சென்றபோது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களால் இவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர் என சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இதற்கு எதிராகவே அப் பத்திரிகைகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஜயலத் ஜயவர்தன எம்.பி தெரி வித்தார். (ஓ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லொழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்க யாழ்.பாடசாலைகளில் இறுக்கமான நடைமுறை

## அமுல் செய்யுமாறு மாகாணக் கல்வி செயலாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 04

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஒழுக்கக் கட்டுப்பாட்டை இறுக்கமாக நடைமுறைப்படுத்தி நல் ஒழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வடமாகாணக் கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளமை வருமாறு:

கடந்த வருடம் ஏ - 9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் பலவகையிலும் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாக ஊடகங்கள் மூலம் செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் பல சம்பவங்கள் யாழ். மாவட்டத்தின் பிரபலமான பாடசாலை மாணவர்கள் சம்பந்தப்பட்டதாகவே உள்ளன.

காலங்காலமாக யாழ்ப்பாண சமூகம் பேணிக்காத்து வருகின்ற கலாசார விழுமியங்களை இவ்வாறான சம்பவங்கள் அழித்து விடப் பார்க்கின்றன. எந்த சமூகத்தினதும் கலை, கலாசார விழுமிய பேணல்களின் ஆரம்பம் மாணவப் பருவத்திலிருந்தே வளர்த்தெடுக்கப்படுவது இயல்பான வழமையாகும். இந்த கடமையைக் கல்விச் சமூகம் மேற் கொள்ள வேண்டிய உடனடி அவசியம் எழுந்துள்ளதென்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

எனவே இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

* சிறந்த ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர் சமூகத்துக்கு உண்டென்பதையும் அக் கடமைகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்பதையும் வலியுறுத்தல்.
* பெற்றோர்களிடையேயும் அவர்களுடைய பிள்ளைகளின் ஒழுக்க கட்டுப்பாடுகளையும் வலியுறுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தல் .
* தவறிழைக்கும் மாணவர்கள் சம்பந்தமாக போதிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதை பாடசாலை மட்டத்திலும், வலய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் ஏற்படுத்தல்.
* கைத்தொலைபேசிப் பாவனை பாடசாலை நேரங்களில் முழுமையாகத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தல்.

மேற்கூறிய நடவடிக்கைகளினூடாக எமது எதிர்காலச் சந்ததியினரை நல்வழிப்படுத்தி சிறந்த கல்விமான்களாக உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் - என்றுள்ளது. (த-15)

## லண்டனில் இன்று யாழ். இந்து பழைய மாணவர் ஒன்றுகூடல்

லண்டன், டிசெ. 4

ஐக்கிய இராச்சிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் ஒன்று கூடலும் இராப் போசன விருந்தும் இன்று சனிக்கிழமை லண்டனில் நடைபெறவுள்ளன.

'ஜொலி லைவ்ப் 2010' எனப் பெயரிட்டுள்ள இந்த நிகழ்வு லண்டன் நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவிருக்கின்றது. நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா கலந்து கொள்ளவுள்ளார். சர்வதேச பழைய மாணவர்கள் கலந்து கொள்ள வுள்ள இந்த நிகழ்வில் சுமார் ஆயிரம் பேர் வரை இதுவரை பதிவு செய்துள்ளார்கள் என்று ஐக்கிய இராச்சிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கத்தின் செயலாளர் எஸ்.தீபராஜ் தெரிவித்துள்ளார். (ஒ-ஐ)

## தொழில்நுட்பக் கல்லூரியில் மூலச் சான்றிதழ்களை பெற முடியும்

யாழ்ப்பாணம், டிசெ. 04

வாழ்க்கைத் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், இரத்மலானை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம் ஆகியன இணைந்து நடத்திய நான்கு கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான மூலச் சான்றிதழ்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

உரியவர்கள் தொழில்நுட்பக் கல்லூரியில் தமது மூலச் சான்றிதழ்களை வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி ந.யோகராஜன் அறிவித்துள்ளார்.

டிப்ளோமா தர ஆங்கிலம் (2007/2008), தேசிய டிப்ளோமா தர ஆங்கிலம் (2008/2009), தேசிய சான்றிதழ்தர தொழில்நுட்பக் கல்வி ஆசிரியர் பயிற்சி (2008/2009), உயர் சான்றிதழ்தர சிங்களம் (2008) ஆகிய கற்கை நெறிகளுக்கான மூலச்சான்றிதழ்களே வந்து சேர்ந்துள்ளன. (ஐ)

மீண்டும்...




எதிர்ப்பு: பிரிட்டன் அரசுக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் நேற்றுக் காலை கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். இவ்வார்ப்பாட்டத்தில் பிரிட்டன் அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன. (த)

## இலங்கையில் வார மொன்றுக்கு இரண்டு எயிட்ஸ் நோயாளிகள்

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் வாரமொன்றுக்கு இரண்டு எய்ட்ஸ் நோயாளிகள் [illegible]தி வாவதாகத் தேசிய பாலியல் நோய் தொடர்பான விசேட நிபுணத்துவ மருத்துவர் சுஜாதா சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி வருடமொன்றில் 350 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பட்டுள்ளார்.

இலங்கையில் 41,000 பாலியல் தொழிலாளர்கள் காணப் படுவதாகவும், நாள் ஒன்றுக்கு ஒரு தொழிலாளி சராசரியாக மூன்று பேருடன் தொடர்பு கொள் வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற பாலுறவினால் இவ்வாறு எயிட்ஸ்நோய் தொற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த)

## இந்தியாவின் கேரள மாநிலத்தில் விடுதலைப்புலிகள் மீளிணைவு

### இந்திய ஊடகம் தகவல்

சென்னை, டிசெ. 04

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீளிணைந்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பிலான ஆவணப் படம் ஒன்று, கேரளாவின் திருவனந்தபுரம் மண்டபத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டதாக ஐ.பி.எம் லைவ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற தமிழினப் படுகொலை தொடர்பில் தயாரிக்கப்பட்ட 'முல்லைத்தீவு சாகா' என்ற பெயரிலான திரைப் படமே மண்டபத்தில் ஒளி பரப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் விடுதலைப் புலிகள் அங்கு மீளிணையலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மிகவும் இரகசியமான முறையில் நடத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்களின் கூட்டத்தைத் தொடர்ந்து இந்தத் திரைப்படம் காட்சிப் படுத்தப்பட்டதாக மலையாள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. எனினும் அதன் பின்னர் காவல்துறையினர் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கேரளாவில் இடம்பெற்ற காவல்துறையினரின் ஊடக சந்திப்புகளின் போதும், ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எனினும் மலையாள சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஜீ.ராதாகிருஷ்ணன் இந்த ஆவணப் படம் திரையிடப்பட்டமை தொடர்பில் ஆச்சரியம் கொள்ளத் தேவை இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இவ்வாறான திரைப்படம் ஒன்று உண்மையில் திரையிடப்பட்டதா? எனவும், அவ்வாறு திரையிடப்பட்டிருந்தால் அதில் கலந்து கொண்டவர்கள் தொடர்பிலான தகவல்கள் குறித்தும் விசாரணை நடத்தி வருவதாகக் காவல்துறை ஆணையாளர் அஜித்குமார் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டின் இறைமையை பாதிக்காத எந்த ஒரு திரைப்படத்தையும் திரையிட தடை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## இலங்கைப் பயணத்துக்கு லியாம் பொக்ஸ் சட்டவிரோதமாகப் பணம் பெற்றுள்ளார்

### திருப்பிச் செலுத்துமாறு பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவு

லண்டன்,

பிரிட்டன் பாதுகாப்பு செயலாளர் லியாம் பொக்ஸ் தாம் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயங்களுக்காக பிரிட்டன் அரசிடம் இருந்து சட்ட விரோதமாக பெற்றுக் கொண்ட 22,000 பவுண்ஸ்களை மீள செலுத்துமாறு பிரிட்டன் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐந்து முறை இலங்கைக்கு விஜயம் செய்துள்ள லியாம் பொக்ஸ், விமானச் சீட்டுக்கான செலவுகள், தங்குமிடச்செலவுகள், உணவு உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும் இலங்கை அரசே ஏற்றுக் கொண்டிருந்தது.

எனினும் இந்த விஜயத்திற்கான செலவினங்களுக்காகப் பிரிட்டன் அரசிடம் இருந்தும் 22,000 பவுண்களை பெற்றுக் கொண்டுள்ளார்.

அது சட்டவிரோதமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் எனக் கூறி, அதனை மீளச் செலுத்துமாறு பிரிட்டன் அரசு லியாம் பொக்ஸுக்கு உத்தரவிட்டிருந்தது.

எனினும் இதற்கு எதிராக லியாம் பொக்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்த போதும், அதனை நிராகரித்த நீதிமன்றம் உடனடியாகப்பணத்தை திருப்பிச் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. (த)

## பக்கச்சார்பற்ற விசாரணைக்கு பிரிட்டன் மீண்டும் வலியுறுத்து

கொழும்பு, டிச.04

இலங்கையில் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்றன என்று கூறப்படும் யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை தேவை என்று பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டன் சென்றுள்ள வேளையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றில் கடந்த ஒக்டோபர் 27ஆம் திகதி இடம்பெற்ற விவாதமொன்றின்போது அந்நாட்டுப் பிரதமர் கெமரூன், இலங்கையில் நடந்த போரின் இறுதிக்கட்டத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்பதை உறுதி செய்வதற்கு சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்று அவசியம் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே பிரிட்டன் மீண்டும் அதை வலியுறுத்தியுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றவையாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக்குற்றங்கள் என்பன இடம் பெறவில்லை என்பதை இலங்கை அதிகாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி இராசையா மகேஸ்வரி

தோற்றம்
08.03.1933

மறைவு
04.11.2010

ஊட்டி வளர்த்த தாயே!
உண்ணும் போதும் உன்நினைவு
தாலாட்டித் தூங்க வைத்த தாயே
தலை நீட்டிக் கண் அயரும் போதும் உன் கனவு
மூட்டி எரித்துவிட்டோம் தாயே
மூண்டு மூண்டு எரிக்குதே மனதை உன் மறைவு
பூட்டியைக் கண்டு போன புண்ணியத் தாயே
போற்றுகிறோம் புலம்புகிறோம் வாழ்த்துகிறோம் வணங்குகிறோம்.

பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

வரதராசா குடும்பம்,
ஜீவராசா குடும்பம்,
சிவசிரோன்மணி குடும்பம்.

(106817)

# மரண அறிவித்தல்

## கந்தையா பெரியதம்பி

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பெரியதம்பி 01.12.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற பொன்னம்மா மற்றும் நாகரட்ணம் (கனடா), இராசரத்தினம் (பெற்றோல்), பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தெய்வேந்திரம் (ஜேர்மனி), சத்தியதாசன், சத்தியதேவி, சகுந்தலாதேவி, பரமேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்து (ஜேர்மனி), ஆமேஸ், பரமேஸ்வரன், சுபந்தினி ஆகியோரின் மாமனும் சுகாஷன் (ஜேர்மனி), சுஜர்சினி (ஜேர்மனி), ஏஞ்சலின், மோசே, றேச்சல், சபிஸ்னன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள்.

புத்தூர் வீதி,
ஈவினை.
தொ.இல. 0776567681. (106827)

# இளையோர் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு, டிசெ.4

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் நடைபெற்ற தேர்தல் மூலம் ஒன்பது பேர் இளையோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மாவட்டத்திலேயே காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் இளையோர் நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு களை கட்டியிருந்தது. பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் காத்திருந்து வாக்களித்தனர்.

பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் தேர்தல் முடிவுகள் வருமாறு:

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் சிவதாஸ் நிரோஜன் வெற்றி பெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 805, அளிக்கப்பட்ட வாக்குகள் 375, வாக்களிப்பு வீதம் 45.6.

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் சின்னராசா அனுசன் வெற்றிபெற்றார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 446, அளிக்கப்பட்ட வாக்குகள் 274, வாக்களிப்பு வீதம் 61.43.

சங்கானைப் பிரதேச செயலாளர் பிரிவில் அம்பிகாவதி குணேஸ் வெற்றி பெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 461, அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 66, வாக்களிப்பு வீதம் 14.33.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் ஜெரோம் ஜோசேம் கிரிசேந்திரா வெற்றிபெற்றார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 460, அளிக்கப்பட்ட வாக்குகள் 267, வாக்களிப்பு வீதம் 58.04.

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவில் சிவபாதம் சிவச்செல்வன் வெற்றிபெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்குகள் 450, அளிக்கப்பட்ட வாக்குகள் 71, வாக்களிப்பு வீதம் 15.7.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் வெற்றிபெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 240, அளிக்கப்பட்ட வாக்குகள் 26, வாக்களிப்பு வீதம் 10.83.

கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் யோகேந்திரன் றஜீதரன் வெற்றிபெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 496, அளிக்கப்பட்ட வாக்குகள் 96, வாக்களிப்பு வீதம் 20.43.

சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் திருஞானசம்பந்தர் விமலதாஸ் வெற்றி பெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 287, அளிக்கப்பட்ட வாக்குகள் 99, வாக்களிப்பு வீதம் 34.49.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கதிரவேலு சயந்தன் வெற்றிபெற்றுள்ளார். இங்கு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 1185, அளிக்கப்பட்ட வாக்குகள் 640, வாக்களிப்பு வீதம் 54.

பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் அதி கூடிய வாக்குகளை அளித்த பிரதேசமாக தெல்லிப்பழைப் பிரதேசம் காணப்படுவதுடன், கடும் பிரசார செயற்பாடுகள் மேற்கொண்ட பகுதியாகவும் அதுவே காணப்பட்டது.

குறைந்த வாக்காளர்களைக் கொண்ட பிரதேசமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் காணப்படுவதுடன், மிகவும் குறைந்த வாக்காளர்களே இங்கு வாக்குகளைப் பதிவும் செய்துள்ளார்கள். எஞ்சிய ஆறு பிரதேசங்களிலும் உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். (உ-86)

## சித்திரபாட வழிகாட்டல் கருத்தரங்கு

சுன்னாகம், டிசெ.4

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சித்திரபாட வழிகாட்டல் செயலமர்வுகள் வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படுகின்றன.

நேற்று முன்தினமும் எதிர்வரும் 7 ஆம் திகதியும் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களுக்கான செயலமர்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் இன்றும், 8 ஆம் திகதியும் சங்கானை கல்விக் கோட்ட மாணவர்களுக்கான செயலமர்வு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் - நாளையும், 9 ஆம் திகதியும் உடுவில், தெல்லிப்பழை கல்விக் கோட்ட மாணவர்களுக்கான செயலமர்வு இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறுகின்றன.

(உ-38)

## கணித விஞ்ஞான போட்டியில் வலிகாமம் வலயத்தின் முடிவுகள்

சுன்னாகம், டிசெ. 4

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 5மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் தரம் 7 பிரிவில் கசீதா தனஞ்செயன் (உடுவில் மகளிர் கல்லூரி), தரம் 8 பிரிவில் கருணன் கபிலன் (இளவாலை மெய்கண்டான் ம.வி.) ஆகியோர் இரண்டாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

ஆங்கில மொழி மூலமான விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் தரம் 9 பிரிவில் விருத்திகா செந்தூரச்செல்வன் (உடுவில் மகளிர் கல்லூரி) முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

கணித வினாடி வினாப் போட்டியில் தரம் 10 பிரிவில் ராஜேந்திரன் ஜனார்த்தனன் (மகாஜனக் கல்லூரி) முதலாம் இடத்தையும் தரம் 11 பிரிவின் ரட்ணசிங்கம் கீர்த்தனா (அருணோதயக் கல்லூரி) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

(உ- 38)


# VACANCIES @ GATEWAY

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for the following positions

**Instructors :**

Ideal candidate should be knowledgeable and enthusiastic, with an IT related diploma that is internationally recognized. Candidates with previous teaching experience will be given priority.

Work Station : Chavakacheri, Nelliyady

**Front Desk Executive :**

Ideal candidates should be friendly, energetic females who possess excellent oral communication skills in English. An accomplished school record, good public relations and marketing skills are essential.

Work Station : Chavakacheri

**Security Guards & Office Employee :**

Preference will be given to applicant from Thenmaradchi.

Work Station : Chavakacheri

**Apply to :**

The Manager
GATEWAY
CENTRE FOR INFORMATION & COMMUNICATION TECHNOLOGY
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 0215675555 Fax : 0212227967
E - Mail : gatewayjfn@sltnet.lk
**** Apply on or before : 09.12.2010 ****



## தேவை

### கட்டட இடிபாடு மண்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்துக்கு 50 லோட் கட்டட இடிபாடு மண் தேவையாகவுள்ளது. இதனை வழங்குபவர்கள் அதன் விலை விபரங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம் (வ.து),
95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 0212222639.

(சி/573348)


# ஓராண்டு நினைவு நாள்

## அமரர் மனோன்மணி அம்மா நாகநாதன்



மலர்வு: 17.03.1921
உதிர்வு: 15.12.2009
திதி: அபரபக்க சதுர்த்தசி

அம்மா என்று அழைக்காத உயிருமுண்டோ?
உன்னை விட ஒரு பொருள் - உலகில்
எங்களுக்கு இன்னமுதாயிருக்க இடமுமுண்டோ
முன்னம் நாம் செய்த முழுத்தவப் பயனாலே
அன்னையுன் பிள்ளைகளாய் அவனிதன்னில் பிறந்திட்டோம்
ஓடோடிச் சென்ற ஓராண்டில்
உன்னை நினைக்காத நாள்தான் உண்டோ?
அன்னையே! தங்கள் ஆத்மா சாந்திபெறப்
பிரார்த்தித்து நிற்கின்றோம்......
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மில்லேன், கொக்குவில்.

(106818)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலலும் நினைவஞ்சலியும்

**04.12.2010**



தாயின் மடியில் 01.11.1926

தந்தை பராபரன் அடியில் 18.11.2010

## அமரர் குணரட்ணம் அல்பேட் குலசிங்கம்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்த எமது குடும்ப விளக்கை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துவதுடன் இவர் நோயுற்றவேளை அன்பாகப் பராமரித்தவர்களுக்கும் மறுமைக்குள் பிரவேசித்த போது நேரிலும் தொலைபேசி ஊடாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்கள், எமக்கு ஆறுதல் கூறியவர்கள் மற்றும் எமக்கு பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் செய்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம் குடும்பத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.

"பின்பு விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன் இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர் என எழுது" என்று அது ஒலித்தது.

(திருவழிபாடு 14-13)

இவரை அன்புடன் நினைவு கூர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சம்பந்தவழிப் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

(பிரான்ஸ்).

58, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (106637)

# இராமாவில் நலன்புரி நிலைய மாணவர்களும் பரீட்சைக்கு.

பருத்தித்துறை, டிசெ.4

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 27 மாணவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

இந்த மாணவர்கள் வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள். சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாததால் இவர்கள் நலன்புரி நிலையத்தில் தங்கி உள்ளனர். இவர்களில் 17 மாணவர்கள் அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மூலமும், 5 மாணவர்கள் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மூலமும், 4 மாணவர்கள் குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாட சாலை மூலமும், ஒருவர் வவுனியா கல்வி வலயத்திலுள்ள பரீட்சை நிலையம் மூலமும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (204- 190)

## சாவகச்சேரி நகரசபை
## 01.01.2011 முதல் 31.12.2011 வரை
## குத்தகைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

01. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 15.12.2010 நண்பகல் 12 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 17.12.2010 முற்பகல் 10 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 17.12.2010 முற்பகல் 11 மணி.

மீள் கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01. | பொதுமலசல கூடம் | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 02. | கருவாட்டுக் கடை இல.1 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 03. | கருவாட்டுக் கடை இல.2 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 04. | கருவாட்டுக் கடை இல.3 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 05. | கருவாட்டுக் கடை இல.4 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 06. | கருவாட்டுக் கடை இல.5 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 07. | கருவாட்டுக் கடை இல.6 | 67,500.00 | 1,000.00 | 1,000.00 |


குறிப்பு:

* கேள்விப்பத்திரக் கட்டணம், கேள்வித் தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக் காலம் அரசினால் விதிக்கப்படும் வரிகளை (பெறுமதிசேர் வரி (12%) நாட்டைக் கட்டியெழுப்பும் வரி (3%)) மேலதிகமாகச் செலுத்த வேண்டும்.
* கேள்விப்பத்திரங்கள் கோரவருபவர்கள் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையினையும், அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டுவர வேண்டும்.
* கருவாட்டுக் கடைகளுக்கான கதவுகள் சபையினால் அமைத்து வழங்கப்படும்
* போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
* மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 02.12.2010 (சி/573343)

செல்வி வீ.சிவக்கொழுந்து
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

# இருபத்தைந்தாம் ஆண்டு நீங்கா நினைவில்...



தோற்றம் 14 . 12 . 1924

மறைவு 04 . 12 . 1985

## அமரர் E.K. சண்முகநாதன்

(இளைப்பாறிய அதிபர் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி,
இளைப்பாறிய அதிபர் - யாழ்/மத்திய கல்லூரி,
ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்- நுவரெலியா,
நிதி அமைச்சின் ஓய்வுபெற்ற ஆலோசகர்- நைஜீரியா)

நீர்வேலி வாழ் கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளையார் செய்த
தவப்பயனால் அவனியில் அவதரித்தவரே!
கலைமகளே வியக்கும் வண்ணம் கல்வியிற்
சிறந்து விளங்கியவரே!
கிராமத்தின் பெருமைகள் சிறக்கும் வண்ணம் 'சிரேஷ்ட பட்டதாரி'
எனும் நன்மதிப்பைப் பெற்ற சீராளனே!
தம்பு - தங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி செல்வராணியை
இல்லாளாய்க் கைப்பிடித்தவரே!
சண்முகேந்திரன், செல்வேந்திரன், சிவேந்திரன் எனும் மூன்று
செல்வங்களைப் புதல்வராய்ப் பெற்றவரே!
ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக
மாணவ சமுதாயத்திற்கு சேவையாற்றியவரே!
சமுதாய முன்னேற்றக் கழகத் தலைவரே!
பாலர் பாடசாலையின் தந்தையே
நீர் சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பெரியன!
எம் நாட்டுக்காற்றிய சேவைக்கு மேலதிகமாக நைஜீரியா நாட்டின்
நிதியமைச்சின் பொதுஜன விரிவுரையாளராகப் பணியாற்றியவரே!
நீர் சமூகத்திற்கும், நாட்டுக்கும் செய்த சேவைகள் எண்ணிலடங்கா!
உம் நினைவுகள் என்றுமே எம்மை விட்டு நீங்காது.

**உற்றார், உறவினர்.**

நல்லவராக, வல்லவராக,
கல்விமானாக, பொருளாதார நிபுணராக
விஞ்ஞானக் கண்ணோட்டம் கொண்டவராக,
சிறந்த செயல்வீரராக மட்டுமன்றி
நல்ல துணைவராகவும், சிறந்த தந்தையாகவும் திகழ்ந்த- எங்கள்
குலவிளக்கு எம்மைப் பிரிந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஓடினாலும்
நீங்காது உம் நினைவலைகள்!

உம் பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

137, பலாலி வீதி,
திருநெல்வேலி. (106807)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம்
கற்கோவளம், பருத்தித்துறை

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் திரு. கண்ணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பாடசாலை எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதுடன் புதிய நிர்வாக சபை தெரிவும் நடைபெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அதிபர்,
யா/ நாகர்கோவில் மகா வித்தியாலயம்,
கற்கோவளம், பருத்தித்துறை.
(சி-573352)

## வினைத்திறன் காண் பரீட்சை இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், டிசெ.4

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பட்டதாரி சேவையாளர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு இன்றும் நாளையும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

2ஆம் வினைத்திறன்காண் பரீட்சையை முன்னிட்டு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளாத அலுவலர்கள் இதில் கலந்துகொண்டு பயனடையுமாறு வடமாகாண அரச சேவை பட்டதாரி அலுவலர் சங்கத்தின் செயலாளர் கே.எஸ். மயூரன் கேட்டுள்ளார். (ற)

## அபிவிருத்திக் குழு அமைத்தல்

யாழ்ப்பாணம், டிச. 04

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் பாடசாலை அபிவிருத்திக் குழு அமைத்தலும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

அதிபர் செ.இளங்கோ தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (ம)


## கூறுவிலை கோரல்

12'.0''x8'.6'' அளவில் G.I பைப் மூலம் தற்காலிக கிளை நிலையம் அமைப்பதற்கு கூலிக்கான கூறு விலை கோரப்படுகின்றது. இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு கூலிக்கான கூறுவிலையை 09.12.2010ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.


## மரண அறிவித்தல்

திருமதி
### விசாலாட்சி வல்லிபுரம்



நல்லூர், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபோரோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி வல்லிபுரம் 24.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைசிங்கம், தம்பிராஜா, இராஜலட்சுமி (கனடா), சோதிமலர் (கரவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருச்செல்வம், காலஞ்சென்ற சிவசெல்வம், செல்வசந்திரன், செல்வநிதி, செல்வரூபி, தயாநிதி, ஜெயாநிதி ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயராணி, சாந்தினி, இந்திராணி, சதானந்தன், அசோகன், டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம், அறிவழகன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 28.11.2010 கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தொ.பே.: 416-269-0597,
416-266-9637.

## மரண அறிவித்தல்

### சின்னையா நல்லநாதன்



திருநெல்வேலி கிழக்கு, புதிய செங்குந்தாவீதி, அஷ்டலட்சுமி வாசத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா நல்லநாதன் 01.12.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகரான மு.க. சின்னையா - சௌபாக்கியவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ரதி சோப் உரிமையாளரான தர்மலிங்கம் - நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் லிங்கவதியின் (ரதி) அன்புக் கணவரும் லீனராதிகா, காலஞ்சென்ற Dr. கோபிகிருஸ்ணன் ஆகியோரின் தந்தையும் மங்களபாரதி, சசிகுமாரி ஆகியோரின் மாமனும் அருண், அகில் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2010 வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அஷ்டலக்சுமி வாசம்,
புதிய செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
0776599748, 021 321 9449, 021 222 1541.

தகவல்:
சகோதரர்கள், [illegible],
சி. ஸ்ரீரங்கநாதன்





உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 704 திகதி 02-12-2010

வெற்றி எண்கள்
18 36 41 59 M

ஜக்பொட் பரிசு ரூ. 15,651,430/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 15,651,430/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 2,000/= | 30,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 354 | 1,000/= | 354,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 565 | 1,000/= | 565,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15157 | 60/= | 909,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6964 | 40/= | 278,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 177578 | 20/= | 3,551,560/= |
| | | | மொத்தம் ரூ. 6,488,540/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 700587804-4-44 |
| பதுளை | 700590238-2-32 |
| குருநாகல் | 700583005-1-41 |
| கம்பஹா | 700584600-4-14 |
| கொழும்பு | 700588416-0-00 |
| இரத்தினபுரி | 700582329-7-17 |
| அம்பாறை | 700590759-4-24 |
| பொலன்னறுவை | 700585983-0-40 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,888,540/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 16,131,850/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 06 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## Computer Express
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Accounting Package 1000/= 3 Months | Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி. கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 05.12.2010 - 9am or 3pm
Batch ii - 06.12.2010 - 9am or 3pm
Batch iii - 08.12.2010 - 9am or 3pm
Batch iv - 10.12.2010 - 9am or 3pm

20.12.2010க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???
NEW Batch :- Saturday (04.12.2010) & Sunday (05.12.2010) 2pm to 3pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசு இந்த வழி சிந்தித்தால் என்ன?

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பெரும் அமளிதுமளி ஏற்பட்டது வாசகர்கள் அறிந்ததே.

அரச தரப்பு உறுப்பினர்கள், பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தனா தலைமையில் எதிர்க்கட்சி (ஐ.தே.கட்சி) உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவைச் சுற்றிவளைத்துத் தாக்குவதற்கு முனைந்துள்ளனர். அதனால் உண்டான கலவர நிலையால் சபை நிகழ்வுகள் இடைநடுவில் ஒத்திவைக்கப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றிருந்த வேளை, ஹீத்ரோ விமான நிலை யத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் - விடு தலைப் புலிகள் அமைப்பின் ஆதராவாளர்களால் - நடத்தப்பட்ட ஆர்ப்பட்டாம் ஐ.தே.கட்சி உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவின் தூண்டுதலினாலேயே இடம்பெற்றது என்றும் -

அதன் எதிரொலியாக ஒக்ஸ்போட் யூனியனில் நடைபெற ஏற்பாடகியிருந்த ஜனாதிபதியின் உரை ரத்துச்செய்யப்பட்டது என்றும்-

சுட்டிக்காட்டியே ஐ.தே.கட்சியின் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்ற ஆக்ரோஷ நிலையில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.

ஒக்ஸ்போட் யூனியனில் ஜனாதிபதி நிகழ்த்த இருந்த உரை ரத்துச்செய்யப்பட்டமை அவருக்கும் நாட்டுக்கும் ஏற்பட்ட பெரும் அகௌரவம் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா பொங்கிக் கொதித்தார்.

'நாட்டின் கௌரவத்துக்கும் அரசமைப்புக்கும் விரோதமான முறையில் பிரிவினைவாதப் புலிகளுடன் இணைந்து ஜனாதிபதிக்கு தலைகுனிவை ஏற்படுத்திய இந்தத் துரோகியை இந்தச் சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும். இந்தத் தூரோகிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என்று கூறியவாறு அமைச்சர் தினேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவை நோக்கிப் பாய்ந்தார். அதனைத் தொடர்ந்து உண்டான அமர்க்களத்தைத் தணிப்பதற்காக சபை ஒத்திவைக்கப்பட்டது.

இது ஒரு புறம் இருக்க -

வன்னி இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் மனிதப் படுகொலைகளுக்கு, ஜனாதிபதியும் பெருமளவு பொறுப்புபென அமெரிக்க ராஜதந்திரிகள் கருதினர் என்று அமெரிக்க இராணுவ ஆவணங்களில் இருந்து கசிந்துள்ளது. சர்வதேச மட்டத்தில் அரச மற்றும் அரசியல் தலைவர்களின் நடத்தைகளை அம்பலப்படுத்தி உலகளாவிய ரீதியில் பரபரப்பை உண்டாக்கி வரும் 'விக்கி லீக்ஸ்' இணையத்தளம் இது குறித்து தகவல் வெளியிட்டிருக்கிறது.

இத்தகைய பாதக நிலைகளைத் தவிர்ப்பதற்கு வழிகள் உண்டு. அரசு அந்தத் திசையை நோக்கி நடக்க மனம்கொள்ளவில்லையே!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டில் 30 வருடங்கள் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை உண்டாக்கி உள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் பொருட்டு உகந்த தீர்வு ஒன்றை முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றரை வருடங்கள் கடந்தும் அந்தப் பக்கத்தை எட்டியும் பார்க்காமல், புதிது புதிதாகக் கருத்துக்கள், காரணங்கள், உத்தேச வழிகள் என்று கூறி வருகின்றார்.

பூகோளத்தில் இலங்கை சிறிய தேசமாக இருந்தாலும், இங்கு நடைபெறும் ஆட்சியையும் ஆட்சியாளர்களையும், அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளையும் மக்களின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் நிலைநாட்டப் படுகின்றனவா என்பதனை எல்லாம் உலக நாடுகள் அவதானித்தும் , சில வேளைகளில் கண்காணித்தும் வருகின்றன. தமிழ் மக்கள் தமக்குரிய உரிமைகளுடன், உண்மையான இலங்கை மக்களாக வாழ்வதற்கு உகந்த அரசியல் தீர்வை முன்வைத்து, நாட்டில் அப்பழுக்கற்ற ஜனநாயகத்தை அரசாங்கம் நிலைநாட்டினால் ஏனைய நாடுகளோ, சர்வதேச நிறுவனங்களோ வெவ்வேறு வடிவங்களில் தண்டிக்கவோ, குறைகாணவோ இடம் இருக்காது.

நாட்டை ஆளும் தலைவர்களும், அரசியல் கட்சிகளும் அதற்கேற்ற திசையில் செயற்பட்டால் லண்டனில் ஏற்பட்டது போன்ற அவமாணமோ களங்கமோ உண்டாக வாய்ப்பில்லை. அரசு இந்தத் திசை நோக்கிச் சிந்திக்கக் கூடாதா?

'நம்ம ஊரில் நத்தார்' என்ற தொனிப்பொருளில்

# ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நத்தார் கலை நிகழ்வு

யாழ்ப்பாணம் .டிசெ- 04

ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் நம்ம ஊரில் நத்தார் என்ற தொனிப்பொருளில் விசேட கிறிஸ்மஸ் நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை வண்ணார்பண்ணை, ஓட்டுமடம், மெதடிஸ்த தேவாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இயங்கும் சர்வமத மற்றும் இன நட்புறவு சிறுவர்பவுண்டேசன்நிலையம்ஏற்பாடு செய்துள்ள இந்த கிறிஸ்மஸ் கலாசார நிகழ்வு அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறும். பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களுக்கு இடையில் பரஸ்பர உறவை வலுப்படுத்தும் நோக்கில் இடம்பெறும் இந்நிகழ்வில் மத குருமார்கள், நான்கு மதங்களையும் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், தொலைக்காட்சிக் கலைஞர்கள், முப்படைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

பெரும்பாலான கலை நிகழ்வுகளில் சிறுவர்களே பங்குபெறக் கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பாக மேலதிக விவரங்களை ஜனாதிபதி செயலகத்தில் இயங்கும் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அந்த நிலையத்தின் தலைவர் வண.சரத் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (ஐ)

# போதிய அலுவலர்கள் இன்றி தேசிய இளைஞர் சேவை மன்றம்

## பணிகளை முன்னெடுப்பதில் பலத்த சிரமம்

வலி வடக்கு,டிசெ4

போதிய அலுவலர்கள் இன்மையால் தேசிய சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பலத்த சிரமங்கள் காணப்படுவதாக யாழ். ம்ாவட்ட அலுவலக வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது.

உள்நாட்டுப் போர் தீவிரமடைவதற்கு முன்னர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் செயற்பாடுகளில் அதிக எண்ணிக்கையான கழகங்கள் யாழ்.மாவட்டத்தில் ஈடுபாடு கொண்டிருந்தன. அவற்றால் பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன

எனினும் வடக்கு கிழக்கில் காணப்பட்ட போர்ச் சூழலைக் காரணமாகக் காட்டி தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு இளைஞர் சேவை அலுவலர்கள் கடந்த பல வருடங்களாக நியமனம் செய்யப்படவில்லை.

யாழ்மாவட்ட அலுவலகத்தில் தற்போது தலைமைப்பீட அலுவலர் தவிர்ந்து இரண்டு இளைஞர் சேவைகள் அலுவலர்களே கடமையாற்றி வருகின்றார்கள்.

யாழ். மாவட்டத்தில் தற்போது பதினொரு பிரதேச செயலகங்களும் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுமாக பதினைந்து அலுவலகங்கள் காணப்படும் நிலையில் மூவர் மட்டுழ் அனைத்து பிரதேச மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கடமையாற்ற முடியாத நிலைமை காணப்படுகின்றது.

மன்றத்தின் ஊடாக இளையோர் நாடாளுமன்றம் முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நிலையில், போதிய இளைஞர் சேவைகள் அலுவலர்கள் யாழ்.மாவட்டத்தில் நியமிக்கப்படாதது பணிகளை மேலும் சிக்கலாக்கி உள்ளது. (உ-86)

## உடுவில் மகளிர் பரிசளிப்பு விழா

வலிவடக்கு. டிசெ-04

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பெண்கள் கல்வி மேம்பாட்டு ஆய்வு நிறுவகப் பணிப்பாளர் திருமதி செ.திருச்செல்வநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-86)

## வடமராட்சி உட்பட சில பகுதிகளில் மின்வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.04

வடமராட்சி மற்றும் சில பகுதிகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் தடைப்படும் என மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாக வேலைகள் பூர்த்தியானால் முன்னராகவே விநியோகம் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 19 | : | 05.12.2010 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | அமாவாசை மு.இ. 11.53 வரை |
| நட்சத்திரம் | : | அனுஷம் மு.இ. 07.14 வரை |
| சுபநேரம் | : | 09.16-10.46 வரை |
| ராகுகாலம் | : | 04.46-06.16 வரை |

# சாதாரண தரப்பரீட்சை அனுமதி அட்டை மாற்றங்களுக்கு இன்று இறுதி நாள்

கொழும்பு, டிசெ.04

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளில் மாற்றங்கள் செய்வதற்கான இறுதித் திகதி இன்றுடன் முடிவடைவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனுமதி அட்டைகளில் பரீட்சார்த்தியின் பெயர், மொழி மூலம் மற்றும் தோற்றும் பாடங்கள் பற்றிய விவரங்களில் தவறுகள் இருப்பின் அவற்றைத் திருத்திக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களுக் கான அனுமதி அட்டைகளில் மாற்றங்கள் இருப்பின் அவை பாடசாலை அதிபர்கள் மூலமாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்துக்கு நேரடியாக சமுகமளித்தோ அல்லது 011-2784208 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ அவசியமான மாற்றங்களைச் செய்து கொள்ளலாமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார். (ம-5)

# புலிகளின் தளபதி கேணல் ரமேஷை விசாரிக்கும் வீடியோ வெளியானது

லண்டன், டிசெ.04

இறுதிப்போரின்போது கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷை படையினர் தடுத்து வைத்து விசாரணை நடத்தும் வீடியோப் பதிவு ஒன்று வெளியாகியுள்ளது.

முள்ளிவாய்க்காலில் வெள்ளைக்கொடியுடன் சரணடையச் சென்ற புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் தளபதி கேணல் ரமேஷ் ஆகியோர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

ஆனால் இவர்கள் சரணடையவில்லை என்றும் போரின்போதே கொல்லப்பட்டதாகவும் இலங்கை அரசும் படைத்தரப்பும் கூறி வந்தன.


போரின்போது கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கேணல் ரமேஷை படையினர் தடுத்து வைத்து விசாரணை செய்யும் வீடியோப் பதிவு தற்போது இணையத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இதன்போது படையினரின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் கேணல் ரமேஷ் திணறுவதையும் அவர் கண்களில் மிரட்சியு டன் இருப்பதையும் தெளிவாகக் காண முடிகிறது.

இதிலிருந்து சிறிலங்காப் படையினரிடம் கேணல் ரமேஷ் சரணடைந்ததும் அதன் பின்னரே அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் இணையத்தளங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



வள்ளுவன் வழியில் வாழ்ந்து
வாழ்வுக்கு வரைவிலக்கணம் தந்து
தலை நிமிர்த்தி வாழ எமக்கு
தொண்டாற்றி நிறைவு தந்து
இறைபக்தி அன்பு அரவணைப்பு
அயராத உழைப்பு

அடுத்தவர் மனங்கோணாத பண்பு
அனைத்தும் ஒருங்கே நிறைந்த
எங்கள் இதய சகோதரா!
எம்மை மகிழ்வுடனே வாழ வைத்து
உலகத்து வாழ்வை நீத்து
ஒப்பற்ற விண்ணக வாழ்விற்கு
தம்மை அர்ப்பணித்த தன்னிகரற்ற சோதரா
எம் குல விளக்கே! எங்கள் உடன்பிறப்பே!
உங்கள் பாதக் கமலத்தில்
கண்ணீர் மாலைகளை ஏற்றுகின்றோம்
ஏற்றருள வேண்டி
இருகரமும் கூப்பி வணங்குகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தோற்றம்: 07.03.1942
மறைவு: 04.11.2010

## அமரர்
## இராமலிங்கம் தில்லைநாதன்

கடந்த 04.11.2010 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (04.12.2010) எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
சகோதரிகள்: பூமணி பரமநாதன், தவமணி நாகேந்திரம், நவமணி துரைசாமி, மருமக்கள்.
இல. 7/8, பிறவுண்றோட், முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(106748)



சங்கீதபூஷணம்
# லயனல் திலகநாயகம் போல்
# ஓராண்டு பூர்த்தி நினைவு இசையாராதனை

காலம்: 05.12.2010 ஞாயிறு
நேரம்: காலை 9 மணி
இடம்: நல்லை ஆதீனம்

இசை:
★குமுதா உமாகாந்தன்
★குணராசா நக்கீரன்
★சுகன்யா அரவிந்தன்
★வாசஸ்பதி ரஜீந்திரன்
(அணிசெய் கலைஞர்களுடன்)

இசைத் தமிழின்
தொன்மையும் திண்மையும்
**நூல்வெளியீடு**

★தலைமையுரை
★வெளியீட்டுரை
★மதிப்பீட்டுரை
★செந்தமிழ் செவ்விசை
**இறுவட்டு வெளியீடு**
வெளியீட்டுரை

இந்நிகழ்வில் தாங்களும்
வருகை தந்து
மதிய போசனத்திலும்
கலந்து சிறப்பிக்கும்
வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

மனிதருடன்: 06.07.1941
இறைவனுடன்: 05.12.2009

ஏழிசையாய் இன்னமுதாய்
அவனியெலாம் போற்றுகின்ற
காழியர்கோன் செந்தமிழாய்
கம்பன் கவியமுதாய்
ஆழமிகு கங்கைநதி
ஆற்றின் புதுப் புனலாய்
தாளமிசை பிசகாத
சங்கீத ஞானத்தால்
மரமாக நிற்போரும்
மசிகின்றவாறு
மகிழ்வோடு சங்கீத
மடை திறக்கின்ற
சுரராக லய விநோத
சுரபியே நாயகமே!
திலக நாயகமே பொருளுணர்ந்து
தண்ணென் றிசைபாடும்
ஈழத்தமிழிசையின்
ஏற்றம் நீ சங்கீத
ஆழம் மிகவுணர்ந்த
கவிஞன் நீ கலைஞன் நீ
காலம் அழிக்கவொணா
கற்பக விருட்சம் நீ
ஞாலம் உள்ளவரை
நின்புகழும் நிலைத்திடுமே!

திலகநாயகம் போல் குடும்பத்தினர்.

### மட்டுவில் வடக்கில் பால் பதனிடும் நிலையம்

தென்மராட்சி மட்டுவில் வடக்கில் ஹற்றன் நஷனல் வங்கி சாவகச்சேரிக் கிளையின் உதவியுடன் பால் பதனிட்டு உற்பத்திப் பொருள்கள் செய்யும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்திற்கு பால் வழங்க விரும்பும் பொதுமக்கள் தொடர்பு கொண்டு பாலினை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த நிலையத்துக்கு பால் வழங்குவதற்கு கறவை மாடுகள் கொள்வனவு செய்ய வங்கி கடன் வழங்கவுள்ளது. எனவே கறவைப் பசுக்களைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் வங்கிக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
(201-207)


**கோழிக்குஞ்சு விநியோகம்**
தரமான புறோயிலர் குஞ்சுகள் 04.12.2010 விநியோகிக்கப்படும். விலை 90/= மட்டுமே. இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
ராஜீவ், நாவலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P-0776090926

**ஆசிரியர் தேவை**
கொக்குவில் மேற்கில் 21வருடம் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு ஆசிரியர் தேவை.
சுகாதாரம்:6-9 புவியியல்: 10-O/L
தமிழ்:6-8 தொடர்பு:- 0213 734414
சமயம்:-9-O/L (Contact after 7.00 p.m)

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்யப்பட்டது 480/= சுத்தம் செய்யப்படாதது 300/=
தொடர்பு:-கி.செல்ரன், நீர்வேலி வடக்கு. (மாதா கோயில் முன்பாக) (106796)

**புறொயிலர் விற்பனைக்கு**
புறொயிலர் கிலோ 300/= சுத்தம் செய்யப்பட்டது. கிலோ 450/= 12 மணி வரை குமரன் பாம் 227, பிறவுண் வீதி, (நரியன் குண்டுக்கு அருகில்) யாழ்ப்பாணம் 0776180675 (106815)

**வாடகைக்குண்டு**
டிப்போ வீதி, கனகபுரம், கிளிநொச்சியில் இரண்டு படுக்கை அறைகளை உடைய சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 0773330132

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை V.M. றோட்டில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.
தொடர்பு:-0770474130
(106781)

**German Swiss மொழி வகுப்புகள்**
German Swiss மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. அத்தோடு CD, புத்தகங்கள் கொடுக்கப்படும். Germany இல் படித்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது. NO.10, Palaly road, Jaffna. T.P.0771604823

**கோழிக்குஞ்சு விநியோகம்**
தரமான No. 1, புறொயிலர் குஞ்சுகள் (நியாயமான விலையில்) 6.12.2010 அன்று காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

**கணினி விற்பனைக்கு**
P-IV, 1.7GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 15,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive என்பனவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: Sky Computer System
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(பேடிவிற் பீரிஸ் முன்பாக) 021 222 1417. (ஓ/572750)

**சேவை**
மாணவர்களுக்கு உரிய வரை மொனிற்றர் பச், பிறிபேக்ட் பச், பிளாஸ்ரிக் அடையாள அட்டை, மெடல்கள், கேடயங்கள், பெயர்ப் பலகை என்பனவற்றை உடனுக்கு உடன் செய்து பெற்றுக்கொள்ள.
எஸ்.எஸ்.பாஸ்கரன் ஆர்ட்ஸ்
இல. 381, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777110610, 0217903020

**கோழிக் குஞ்சு விநியோகம்**
தரமான புறொயிலர் No - 1 கோழிக்குஞ்சுகள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்க இருக்கின்றன. (Nelna Farm) மிகக் குறைந்த விலையில் நம்பிக்கையாகப் பெற்றிட நாம் வேண்டிய இடம் இலங்கையின் தலைசிறந்த விநியோகஸ்தர்கள்
**(Mafa Farm House)**
தொடர்புகளுக்கு
0773657008, 0773760445.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. ஆகக் கூடிய சில்லறை விலை 110/= உடன் தொடர்புகொள்ளவும். (106512)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
சுப்பிரமணியம்
நடேசன்



[கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை]
[முன்னாள் முகாமையாளர்-
Aero Electrical-K.K.S.
Midea Electromart,
Jaffna Electricals]

மலர்வு:
08.01.1948

உதிர்வு:
02.11.2010

(106814)

கடந்த 02.11.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.12.2010) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க.சண்முகலிங்கம்
விக்கினேஸ்வரா வித்தியாலயம் முன்பாக,
பிள்ளையார் கோயில் வீதி, கைதடி கிழக்கு, கைதடி.

பிள்ளைகள்.


## வடமராட்சி கிழக்கில் வீதிகள் புனரமைப்பு

பருத்தித்துறை, டிசெ.4

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள, வீதிகளைப் புனரமைப்பதற்கு உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது.

அப்பகுதிகளிலுள்ள வீதிகள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

செம்பியன்பற்று மானியவளை வீதி, வாடிவட்டன் வீதி, அரசடி வீதி, உடுத்துறை மகாவித்தியாலய வீதி, ஆழியவளை கொக்குளாய் வீதி, ஆழியவளை பாடசாலை வீதி ஆகிய வீதிகளே புனரமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (204 - 190)

## கொடுப்பனவுகள் தபாலகங்களுக்கு

நவாலி,டிசெ.4

வலி தென் மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் காசநோய், புற்றுநோய், யானைக் கால்நோய் என்பவற்றிற்கான உதவிப் பணம் பெறுபவர்களினதும் இந்த மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த மாதம் 5ஆம் திகதிக்கு முதல் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (204 - 100)


முன்னாள் அரச அதிபர் மக்கள் மாமணி
கந்தையா பொன்னம்பலம்
நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்



அழைப்பு

இடம்:
புனித திரேசா பெண்கள் கல்லூரி
மண்டபம், கிளிநொச்சி

காலம்:
தி.ஆ. 2041 கார்த்திகை 20
(06.12.2010) திங்கட் கிழமை
மு.ப.9.30 மணி.

முக்கிய நிகழ்வுகள்

நினைவுரை: திரு.தி.இராசநாயகம்
(பிரதி முதன்மைச் செயலர்,வடக்கு மாகாணசபை)
சிறப்புரைகள்: திருமதி ரூபாவதி கேதீஸ்வரன்
(அரச அதிபர், கிளிநொச்சி)
திரு.நா.வேதநாயகம் (அரச அதிபர், முல்லைத்தீவு)
திரு.த.குருகுலராஜா
(வலயக் கல்விப் பணிப்பாளர்,கிளிநொச்சி)
அறக்கட்டளை சொற்பொழிவுகள்
தமிழ் வழிக்கல்வி
திரு.அ.விசுவாசம் (துணை முதல்வர், பூநகரி உ.நி.ப.)
தமிழ் இலக்கியத்தில் மனிதநேயக் கூறுகள்
அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார்
(தலைவர்,மன்னார் தமிழ்ச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னம்பலம் குடும்பத்தினர்
கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம்.

(106747)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
சரோஜினிதேவி
பஞ்சாட்சரதேவன்



திதி: கார்த்திகை மாத
அபரபக்க சதுர்த்தசி
(04.12.2010)

தோற்றம்:
21.02.1947

மறைவு:
15.12.2009

நாம் சிரித்தால் சிரித்து
அழுதால் துடித்து
எங்களுக்காய் வாழ்ந்த
எங்கள் குல விளக்கே
பாசத்தின் திருவுருவே
தெய்வத்திற்கு நிகரானதாயே
எம் உயிர் உள்ளவரை
உன் நினைவு நீங்காது

நினைவுகளுடன் பிரிவால் துயருறும்:
கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
உற்றார்,
உறவினர்.

'அம்பிகை பவனம்',
துறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

(106810)



# சுவர்ணமஹால்

பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

யாழ் மக்களுக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்

03 மாத நிலையான வைப்புக்கு

ஆண்டு ஒன்றிற்கான வட்டி வீதம்

# 14.00%

(A.E.R.14.75%)

(சிரேஸ்ட பிரஜைகளுக்கு)

இந்த அரிய வாய்ப்பு எமது கிளை யாழில் தடம் பதிக்கும் நாளான
06.12.2010 அன்று மட்டுமே
இல. 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : டிலானி 077 22 68 555
: ராகுலன் 077 22 68 723

எமது பிரதான சேவைகள்

- நிலையான வைப்புகள்
- சேமிப்பு வைப்புகள்
- தங்க நகை அடகு சேவை
- வாடகை கொள்வனவு
- நிதிக்குத்தகை (லீசிங்)

SFS

சுவர்ணமஹால்
பினான்ஸியல் சேர்விஸஸ் லிமிடட்

A trust etched in gold

இல: 654, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0112 556160-4
தொலைநகல் : 0112 595062/2589823 மின் அஞ்சல்: infor@sfs.lk இணையத்தளம்: www.sfs.lk

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்:

கலாநிதி சோமா எதிரிசிங்க (அவைத்தலைவி) ஜே.எச். எதிரிசிங்க (பிரதி அவைத்தலைவர்) ஏ.டி.. எதிரிசிங்க (பணிப்பாளர்) என்.பி. எதிரிசிங்க (பணிப்பாளர்) ஏ.எஸ்.எதிரிசிங்க (பணிப்பாளர்) சுனில் அபேரட்ன (பணிப்பாளர்) FCA(SL), FSCMA(UK), FCMA (SL), CMA (AUS) மஹேந்திர டி சில்வா (பணிப்பாளர்) MBA, FCA, FSCMA (AUS) சமீர கனேகொட (பணிப்பாளர்/நிறைவேற்று அதிகாரி) ACA, B.B.Mgt.(Acc), ASCMA.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் 1988ம் ஆண்டின் 78ம் இலக்க நிதி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளது

பதிவு இல : PB 584



# மரண அறிவித்தல்

## இராஜேஸ்வரி நடராசா (சீனி)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி நடராசா (சீனி) கடந்த (28.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், நடராசாவின் அன்பு மனைவியும், உமாகாந்தனின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, அப்புத்துரை, யோகரத்தினம்( குருத்து) மற்றும் பரமேஸ்வரி (பேபி-கனடா), பாலசுப்பிரமணியம் (பொபிரவல்ஸ்-பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவியின் அன்பு மாமியாரும், ஞானபூபதியின் மைத்துனியும், ராம், திவ்யா,சுரேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வரதராஜனின் (ஓய்வுபெற்ற சேவைக்கால ஆலோசகர்-சித்திரம்) சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் (04.12.2010) இன்று சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாமகள் லேன்,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்
லோகேஸ்வரன்
பிரேமாவதி குடும்பத்தினர்.

(106811)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா தர்மலிங்கம்



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட தற்போது கனடா, BRAMOTON நகரில் வசித்து வந்தவருமாகிய திருமதி தங்கம்மா தர்மலிங்கம் 28.11.2010 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், அரியாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (கட்டட ஒப்பந்தகாரர், சிற்பஸ்தபதி) அன்பு மனைவியும் கமலாவதி, யமுனாவதி, இலங்கேஸ்வரன், லலிதாவதி, சர்வேஸ்வரன், கலாவதி, பிரபாகரன், வசந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் V.T. இராஜேந்திரா, சக்திவேல், வசந்தி, ஜெயஸ்ரீதரன், கீதாஞ்சலி, ரட்ணகுமார், சிவனேஸ்வரி, தர்மபாலன் ஆகியோரின் அன்பு மாமியும், டிலுக்ஷன், சுலக்ஷன், கீர்த்தனா, கிரிஷாந், ஹரிஷாந், ஜானுகா, கஜன், ஷாருஷன், இலக்கியா, லக்ஷனா, உதிஸ்ரன், மேனன், வித்தியாதரன், நிவேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துரையப்பா, காலஞ்சென்றவர்களான மாரிமுத்து சின்னத்துரை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, கந்தையா பரமசாமி, அன்னலட்சுமி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இரங்கல் நிகழ்வு (துக்கம் பகிர்ந்து கொள்ளல்) இன்று (04.12.2010) சனிக்கிழமை 40/2, கலைமகள் வீதி, அரியாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/8, அன்டர்சன் தொடர்மாடி,
நாரகேன்பிட்டிய,
கொழும்பு - 5

தகவல்:
திருமதி கமலாவதி இராஜேந்திரன்
V.T. ராஜேந்திரா. தொ.பே. 2590451

## இராமசாமி பஞ்சலிங்கம்



கோண்டாவிலைச் சேர்ந்த இராமசாமி பஞ்சலிங்கம் நேற்று 03.12.2010 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் இராமசாமி மற்றும் இரத்தினமலர் தம்பதியரின் பாசமிகு மகனும், விஜயகுலராணியின் (ஆசிரியை, கிளி/ம.கல்லூரி) அன்புக்கணவரும், பொன்னுத்துரை சரஸ்வதி, நவரத்தினம் சாரதாதேவி, அமரரான இராசரத்தினம் தர்மேஸ்வரி, சதாசிவம் சாந்தவதனா, விக்னேஸ்வரன் விமலராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# சித்திரப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 4

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் 'யுனிசெவ்' அனுசரணையுடன் நடத்திய சித்திரப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும்.

வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) சு. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும் யுனிசெவ் பிரதிநிதி திருமதி சு. சர்மிளா, ஓய்வுபெற்ற சேவைக்கால ஆலோசகர் வ. குகவேள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஒ-ஐ)

# சிவன் முன்பள்ளியின் பரிசளிப்பு விழா

சுன்னாகம், டிசெ. 4

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து நடத்தும் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறும்.

சனசமூக நிலையத் தலைவர் செ. சிவநடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக ஆலோசனைக் கட்டடத் திணைக்கள முகாமைத்துவப் பணிப்பாளர் கா. லிங்கேசனும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான சிறுவர் நிதியத்திட்ட அதிகாரி த. பகீரதராஜ், யாழ். பிராந்திய சனசமூக நிலைய உத்தியோகத்தர் ம. ஞானவேல்ராஜா, சுன்னாகம் கிழக்கு கிராம அலுவலர் வி.எம். இராமலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஒ-ற-86)

# சட்டவியல் கற்கை நெறி

யாழ்ப்பாணம், டிசெ. 4

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தெரிவுப் பரீட்சை மூலம் இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்படிவங்களை நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-ஐ)

# சேவை நலன் பாராட்டு



04.12.2010

திரு.நமசிவாயம் பாலச்சந்திரன் S.L.P.S -2-I

எமது பாடசாலையில் ஆசிரியர் சேவை:- 02.04.1992- 03.02.1996

அதிபர் சேவை:- 04.02.1996- 04.12.2010

இன்றுடன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் எமது அதிபர் இறையருள் பெற்று பல்லாண்டுகாலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

யா/சுழிபுரம் மேற்கு ஆறுமுக வித்தியாலயம்,
ஆசிரியர் நலன்புரி சங்கம்.

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

# கூறு விலை கோரல்

சங்கத்திற்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் அமைந்துள்ள சேதமடைந்த கட்டடங்களை இடித்து அகற்றி எடுத்துச் செல்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் மூடிய கூறுவிலைகளாக (Sealed quotation) இன்றில் இருந்து 14 நாள்களுக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கூறுவிலைகள் ஆராயப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக் கூடிய தொகையினை கோரப்படும் கொள்வனவாளர் சங்கத்தினால் குறிப்பிடப்படும் திகதியில் முழுப்பணத்தினைச் செலுத்தி 14 நாள்களுக்குள் இடிபாடுகளை அகற்றி எடுத்துச் செல்ல வேண்டும்.

01) மொத்த நிலையம் - தெல்லிப்பழை
02) கிளை 03- மகாதனை
03) கிளை 05 - மொத்தநிலைய களஞ்சியம்
04) கிளை 44 - மயிலங்கடல்

சங்க காரியாலய கடமை நேரங்களில் கட்டடங்களைப் பார்வையிடலாம். கூறு விலை அனுப்ப வேண்டிய முகவரி "பொது முகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை"

2010.12.03 (சி-573360) பொது முகாமையாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் உயர்திரு

## ஐயாத்துரை விஷ்ணுவர்த்தன்



அன்னையின் மடியில்
13.07.1977
ஆண்டவன் அடியில்
15.12.2009

திதி: சதுர்த்தி

பதிவைத்து பெற்றெடுத்த பயன் மிகு கல்விக்கோர்
ஒளிவைத்துக் கல்விப் பூமியில் ஒளிர்ந்திட்ட பெருந்தீபமே
கதிபோன்று கல்விப்புலம் உனைநம்பி வளர்ந்திருக்க
விதிபோன்று மடிந்தனையோ கண்ணீர் சிந்தி விம்முகிறோம்
வானுறையும் தீபமே தோன்றாத் துணையாம் எம் இதய ஆலயமே
வருடமாய் இணைந்து மைந்தருக்கு ஞானபாலன் தந்துநின்றிருந்தீர்
ஆக்கியிட்ட கடமையாக குடும்பத்தை முருகேற்றி ஆன்மான சக்தியாய் நம்மை
எல்லாம் வழிப்படுத்தி சக்தியாய் போலமாய் உறுதுணையாய் எங்களுடைய
இதயங்களில் நிறைந்து நின்றீர் கண்ணீரோடு உமை மறவாது நினைந்து புகழுகிறோம்.

ஓம் சாந்தி!

சங்கரத்தை, துணவி,
வட்டுக்கோட்டை.

ஆறாத்துயரில் மூழ்கும்: மனைவி, மகன், தாய், தகப்பன், சகோதரர்கள், மாமன், மாமி, மைத்துனர்.

# மரண அறிவித்தல்

## திருமதி அன்ரன் ஜெனோஷன் இமாலினி



வட்டக்குளம், கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், டச்சு றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரன் ஜெனோஷன் இமாலினி நேற்று (03.12.2010) வெள்ளிக் கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் பாலசுந்தரம் - இராசமலர் தம்பதியரின் அன்பு மகளும் அருமைநாயகம் - திலகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் அன்ரன் ஜெனோஷனின் அன்பு மனைவியும் மதுஷன், டன்சிகா, சயீஸ் ஆகியோரின் அன்புத் தாயும் அனுலாஜினி (சுவிஸ்), சசிகுமார், பிரமிளன் (லண்டன்), பாலமுரளி (பிரான்ஸ்), அரவிந்தன், தாட்ஷாயினி, கனிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் வினோஜன் (லண்டன்), கிருஜா (பிரான்ஸ்), சாள்ஸ் வதனோஜன், அனுஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை டச்சு வீதி, கோப்பாயில் இடம்பெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (106901)

தகவல்:
அன்ரன் ஜெனோஷன் (கணவர்)
(Sales Manager, Union Assurance)

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 846 திகதி: 02.12.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| Y | 12 | 44 | 59 | 64 | 55 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 23,201,517.50 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 298 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14470 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 202137 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30122 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 31,289,697.50

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 10,000,000.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 182 | சீட்டிழுப்புத் திகதி 02.12.2010

வெற்றி இலக்கங்கள்: 25 31 33 35

சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 9,521,660/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 57877 | ரூ. 20/= | ரூ. 1,157,540/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 5257 | ரூ. 40/= | ரூ. 210,280/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 4511 | ரூ. 100/= | ரூ. 451,100/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 429 | ரூ. 200/= | ரூ. 85,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 105 | ரூ. 1,500/= | ரூ. 157,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 7 | ரூ. 3,000/= | ரூ. 21,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 1,000,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 9,521,660/= | |
| மொத்த எண்ணிக்கை | 68187 | | ரூ. 3,083,220/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 9,697,700/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, சுகாநிதி கோல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
**சாயினி ஜெயராஜா**

மலர்வு : 18 - 11 - 2007
உதிர்வு: 04.12.2009

சாயினி நீ சாகவில்லை

சாயினி நீ எம் சகாப்த விடிவெள்ளி
சப்த ஸ்வரங்களில் நாம் கேட்பது
சாயினி உன் சத்தத்தைத்தான்
துளித்துளி மழையிலும்
துளிப்பது உன் முகம் தான்
பன்னீர்துளிகளின் வாசனை காணோம்
பரிதவிக்கவிட்டுச்சென்றாயோ பாரினில் எம்மை

பார் உள்ளவரை உன் பசுமை நினைவுகள்
எம்மை விட்டு அகலா
சாயினி நீ சாகவில்லை
எம் இதய சாகரத்துள்
என்றும் இன்மையோடு உள்ளாய்
உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்போம்
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டிலும்

198, தம்பரிட்டி வீதி,
பருத்தித்துறை. (சி-573361)

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அண்ணா, அக்கா

## மரண அறிவித்தல்கள்

### தம்பிராசா சுந்தரலிங்கம்



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், பங்களா வீதி, மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சுந்தரலிங்கம் நேற்று வெள்ளிக்கிழமை (03.12. 2010) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கதிரவேலு - காலஞ்சென்ற இராசம்மா தம்பதியரின் அருமை மருமகனும், லலிதாவின் அன்புக் கணவரும், சுதர்சன் (பிரான்ஸ்), சுலோசன் (ஜேர்மனி), சுகிர்தன் (பிரான்ஸ்), சுகந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனுஷா (பிரான்ஸ்), சிவராஜி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருகன், சாமினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவபாக்கியம், குமாரவேலு, நல்லம்மா (அவுஸ்திரேலியா), கமலாதேவி மகேந்திரம், சண்முகலிங்கம், ஸ்ரீஸ்வரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற எஸ். எஸ். கணேச பிள்ளை, மீனாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற நடராசா, பத்மாவதி, யோகராச மலர், தவமணி (ஹொலண்ட்), கிருபாகரன் (கனடா), குணசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை. (106834)

தகவல்:- குடும்பத்தினர்.
தொ.பே.: 021-3213307,
077 8245560.

### கந்தையா நாகராசா

(முன்னாள் ஊழியர், தபால் திணைக்களம்)



புங்குடுதீவு, குறிகாட்டுவானைப் பிறப்பிடமாகவும் கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகராசா நேற்று( 03.12.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கமுத்து தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதியரின் மருமகனும் ராஜலட்சுமியின் (தவமணி) அன்புக் கணவரும் முத்துக்குமாருவின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

103/1, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (106834)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## வீடு விற்பனை

மானிப்பாயில் 3¾ பரப்புக் காணியில் உள்ள மதில் அடைக்கப்பட்ட கல் வீடு ( 5 அறைகள்) விற்பனைக்கு உண்டு. (12 தென்னை / 7 பலா / 5 மா மரங்களைக் கொண்ட மாத வருமானம் 2,500/=) கோயில், வைத்தியசாலை, பாடசாலை, சந்தை என்பன அருகில் உள்ளன.

தொடர்புகளுக்கு: 0777349357, 0112503018
மின்னஞ்சல்: mohan1821@hotmail.com

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் 4Kg மேற்பட்டது. சுத்தம் செய்து 1Kg 450/= அத்துடன் கல்பேட், ஊர்ச்சேவல் என்பனவும் விற்பனைக் குண்டு.

158/5, தாசன் பாம், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

டிரோ பட்டா தேவை விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

சா.கலிஸ்ரஸ்
குப்பிளான், T.P.0778996559

## கொங்கிரீட் கற்கள் தேவை

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் -உடுத்துறை கிராமத்தில் 12''× 6''×4'' அளவான கொங்கிரீட் கற்கள் மலகூட வேலைகளுக்கு தேவைப்படுகிறது. தரமான கொங்கிரீட் கற்கள் குறித்த இடத்தில் 40/= படி கொள்வனவு செய்யப்படும். கற்கள் வழங்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒப்படைக்கப்பட்ட 05 நாள்களுள் இதற்குரிய கொடுப்பனவு வழங்கப்படும்.

தொடர்பு- 0777238686

## தவறிவிட்டது

முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் எனும் முகவரியைச் சேர்ந்த வெற்றிவேலு யோகநாதன் என்பரது தேசிய அ.அட்டை (620741990V) லைசன்ஸ், தொழில் அ. அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் 30.11.2010 அன்று நவாலிக்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத் துதவவும்.

T.P-0779213706

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 1kg 430/= மட்டும். முழு நிறை 1kg 280/= மட்டும். கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு

விஜயகுமார், குவப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## வீடு வாடகைக்குத் தேவை

இணுவில், கோண்டாவில், கொக்குவில் பகுதிக்குள் கே.கே எஸ். வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 0773163530, 0773163525

## மானிப்பாயில் காணி விற்பனைக்கு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கு அண்மித்ததாக இணுவில் வீதியின் விசுகடி வைத்தியர் வீதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
கௌரி, 0756578036
அல்லது 071 6578036

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், மருதடிச் சந்திக்கும் யூனியனுக்குமிடையில் றோட்டுக்கு அருகாமையில் நி.பர.3, குழி 2.25 விஸ்தீரண ஆதனம் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
தொ.பே.0776006506, 0774156111

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறோயிலர் இறைச்சி சுத்தம் செய்யப்பட்டது. 1kg 430/= வியாபாரிகள் விஷேட விலையில் பெற்றுக்கொள்ளலாம். காலை 6 மணிமுதல் மாலை 8 மணி வரை வியாபாரம் இடம்பெறும்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். 021-2226944.

## மணமகள் தேவை

வெளிநாட்டில் குடியுரிமையுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை. E.mail மூலம் தொடர்பு கொள்ளவும்.

Golden time 2011 @ yahoo.com
T.P. 0016478189248

## விற்பனை ஊக்குவிப்பாளர் தேவை

முன்னணி தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்துக்கு விற்பனை ஊக்குவிப்பாளர் தேவை

தகுதியுடையவர்கள் எதிர்வரும் 06.12.2010 திங்கட்கிழமை சுயவிவரக்கோவை, அடையாள அட்டை, கிராமசேவையாளர் வதிவிட சான்றிதழ் என்பவற்றுடன் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு சமுகம் தரவும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P . 0754986101

## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராய் காளிகோயில் என அழைக்கப்படும் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தின் பிரதம குரு சிவ ஸ்ரீ தியாக - கிருஷ்ண மூர்த்தி குருக்களது அன்புத் தாயார்

**ஸ்ரீமதி ருக்மணி அம்மா**


அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய அருளுமாறு ஸ்ரீ காமாட்சி அம்பாள் பாதம் பணிகின்றோம்.

ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம்,
பலாலி வீதி, உரும்பிராய்.

ஆலய பரிபாலன
சபையினரும்
தொண்டர்களும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
06
08
1945



விண்ணில்
04
11
2010

**ராமலிங்கம் தில்லைநாதன்**

நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ!
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்.
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிசமாய்த் திகழ்ந்தீர்கள் நீங்கள்.
நித்தம் புலம்புகின்றோம் நாமிங்கு.
பாரினிலே பண்புயர் தெய்வமாகத் திகழ்ந்தீரே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே அப்பா.

687/6, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம் (106043)

சிவகுமார்(வள்ளி)
(மகன்).

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் பொன்னுத்துரை



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னுத்துரை நேற்று(03.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகாத்தை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மருதையினார் - இளையபிள்ளை தம்பதியரின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் உசாமதி, உமாவதி (சுவிஸ்), உதயகீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சியாமளா, சண்முகதாஸ், உதயசங்கர் (சுவிஸ்), குமுதினி ஆகியோரின் மாமனும் அரவிந்தன், ஜெயப்பிரியன் மதுப்பிரியன், அனித்தா (சுவிஸ்), அனிக்கா (சுவிஸ்), பவிஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2010) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளப்படும்.

சரவணை கிழக்கு,
சரவணை (106847)

தகவல்:
உதயகீதன்
(மகன்).

### ஆறுமுகம் குணநீதன்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணநீதன் நேற்று (03.12.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் புளிங்குளம் கிஸ்ணதேவியின் அன்புக் கணவரும் சிவசோதி அம்மா, குணரஞ்சன், குணநேசன், குணநாதன் (லண்டன்), காலஞ்சென்ற குணதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லையா கந்தசாமி, சிவகுருநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் சின்னம்மாவின் (தேவி) அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.12.2010) சனிக்கிழமை செட்டிகுளம் - நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியாவில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி. (சி-573353)

தகவல்:
செ.கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதன நூலகம் சிவாந்துறைப் படிப்பகம் ... யாழ்ப்பாணம்.

## இலங்கையைப் பிளவுபடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழித்துக்கட்டிய தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. பிரிட்ட னில் இடம் பெற்ற சம்பவங் களுக்கு பிரிட்டிஷ் அரசே பொறுப் பேற்க வேண்டும்.

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்கும் பல நாட் டுத் தலைவர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்த போதெல்லாம் இலங்கை அரசு உரியவாறு அவர்களுக்கு இராஜ மரியாதை அளித்தது.

அத்துடன் அவர்களுக்கான இராஜதந் திர முறையை அரசு கையாண்டுள்ளது. அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ ரஷ்யாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு விஜயம் மேற்கொண்டார். அந்நாடு அவருக்கு உரிய மரியாதையை யும் அதி உச்ச கௌரவத்தையும் வழங் கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் பல பயங்கரவாத இயக் கங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள் ளது. அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் அடங்கும். ஆனால், புலிக் கொடிகளுடன் பிரிவினைவாதிகள் ஆர்ப் பாட்டம் நடத்த பிரிட்டிஷ் அரசு அனு மதியளித்தது.

இவர்களுடன் இலங்கையைக் காட் டிக்கொடுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் விக்கிரம பாகு கருணாரட்ண ஆகியோரும் இலங் கையில் பிறந்து லண்டனில் வசிக்கும் சில தேசத் துரோகிகளும் இணைந்துள் ளார்கள் - என்றார் விமல் வீரவன்ஸ.

(ஒ-சி)

## சனல் - 4 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற காட்சிகளை கடந்த செவ் வாய்க்கிழமை ஒளிபரப்பியது. இதை யடுத்தே ஐ.நா. தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

ஆனால் பிரிட்டனுக்கான இலங் கைத் தூதரகம் சனல் 4 வெளியிட் டிருந்த காட்சிகள் போலியானவை என மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (சி)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்திருந்த 186 பேர் காலையி லேயே கொட்டும் மழைக்கு மத்தியிலும் திருகோணமலை செயலகத்துக்கு வந்தி ருந்தனர்.

எனினும் ஆணைக்குழுவினர் நண் பகல் 12 மணியளவிலேயே அங்கு வந்து சேர்ந்தனர்.

மணித்தியாலக் கணக்கில் அங்கு அமர்ந்திருந்து மக்கள் சோர்வடைந்த நிலையிலும் கூட அமர்வுகள் ஆரம்ப மானதும் சாட்சியமளிக்க அவர்கள் தயாரானார்கள்.

ஆனால் குறிப்பிட்ட சில பெண் களிடம் மட்டும் சாட்சியங்கள் பதிவு செய்து கொண்ட ஆணைக்குழுவினர், ஏனையோரிடம் சாட்சியப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

சாட்சியம் அளித்த பெண்கள் தமது உறவுகளை தம்மிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்ணீர் மல்கியவாறு மன்றாடினர்.

ஆணைக்குழுவின் விசாரணை இன்று மூதூரில் இடம்றெ உள்ளது. (ஒ-ஐ)

## போர்க்குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் நீதிகேட்டு இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவையின் தலை வர் வண. எஸ்.ஜே.இம்மானுவேல் அடிக ளார், பிரிட்டன் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் சார்பில் இந்த வழக்கை, பிரிட்டன் தமிழர் பேரவை யின் சார்பாக அந்நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் றையன் அம்மையார் நீதிமன்றில் தாக் கல் செய்திருக்கின்றார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருடன் லண்டன் சென்றிருந்த அவரது பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான மேஜர் ஜெனரல் சஜி கலகே உட்பட பலருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப் பட்டது. (சி)

## வடக்கு, கிழக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பைக் குறிப்பிட்ட மாகா ணங்களில் மக்கள் விரும்புகிறார்களா என்று ஆணைக்குழுத் தலைவர் கேள்வி எழுப் பினார்.

அந்த மாகாணங்களின் மக்கள் இணைந்து இருக்கவே விரும்பு கின்றனர். மாகா ணங்களின் மக்களிடையே எதிர்ப்பு எதுவும் இல்லை.

ஆனால் அந்த மக்களுக்கு வெளியே உள்ளவர்களே இந்த இணைப்பை எதிர்க் கின்றார்கள் என்று அவர் பதில் அளித் தார்.

மதரீதியான பிளவுகளே கடந்த காலங்களில் கசப்பான விடயங்களுக் குக் காரணமாகின என அருட்தந்தை தெரி விக்க, மதரீதியான பிரச்சினைகள் நாட்டில் இல்லை. இந்து மக்களும், பௌத்த மக்களும் சகஜமாக கொழும் பில் வாழ்கின் றனர் என ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

## மீசாலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:

நேற்றுப் பிற்பகல் அலவாங்குடன் வந்த இளைஞன் ஒருவன் ஏ-9 பாதை யில் சென்ற தனியார் மினிபஸ் ஒன்றைத் தாக்கி அதன் கண்ணாடிகளை உடைத் தார்.

அதன் பின்னர் அந்தப் பகுதிக்கு வந்த போக்குவரத் துச் சபையின் பஸ் ஒன்றில் கண்ணா டிகளையும் நொருக் கினார்.

அந்த வேளை அங்கு பணியில் இருந்த சிப்பாய் ஒருவர் பிரஸ்தாப இளைஞனை நெருங்கி கட்டுப் பாட்டில் கொண் டுவர முயற்சித் தார். அவரையும் அந்த இளைஞன் தாக்கியுள்ளார்.

இந்தச் சிப்பாய் காயமடைந்து கீழே விழ அங்கு பணி யில் இருந்த மற் றொரு சிப்பாய் தீர்த்த வேட்டுக்கு அந்த இளைஞன் பலியானார்.

பின்னர் அந்த இளைஞனின் சட லம் யாழ்.ஆஸ்பத் திரியில் ஒப்ப டைக்கப்பட்டது.

இந்தச் சம்ப வம் குறித்து பலாலி படைத் தலை மையக ஊடக பிரி வினருடன்தொடர்பு கொண்டு கேட்ட போது -

மனநோயாளியான இளைஞன் பஸ் களை நொறுக்கிய துடன் நிர்வாண மாக நின்றார் -

யாழ்ப்பாணத் திற்கு பயணிக்க நின்ற சிப்பாயை தாக்கி காயப்படுத் தினார் பின்னர் மற் றொரு சிப்பாயை இரும்புக் கம்பி யால் தாக்க முற் பட்டார்.

சுய பாதுகாப்புக் காக அந்தச் சிப் பாய் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோ கத்தில் குறிப்பிட்ட இளைஞன் உயி ரிழந்தார். இளைஞனின் தாக்குதலால் சிப்பாயும் படுகாயமடைந்தார் - என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் குறித்த தகவல் கிடைத்த தும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண் டனர். (அ-ஐ-207-131)


யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(With Digital Electronic )

Course Fees - Rs.7500/= Only

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

UNI - ICT CAMPUS (PVT) LTD
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862


### கருத்தரங்கு

O/L மாணவர்களுக்கான தமிழ்ப் பா க் கருத்தரங்கு
இடம்: நியூ விறைற் கல்லூரி நிலையம் மாட்டின் றோட், யாழ்ப்பாணம்
நேரம்: 3.30 மணிக்கு
திகதி: 05.12.2010 ஞாயிற்றுக்கிழமை
ஆசிரியர் M.G. Janakan


யாழ். நகரில்
முதல் முறையாக நம்பமுடியாத கட்டணக் கழிவில்



சர்வதேச கற்கை நெறிகள்

நீங்கள் காலவிரயமின்றிப் பட்டதாரியாக வேண்டுமா? சர்வதேச அங்கீகாரம் கொண்ட பட்டப்படிப்பையும். அதற்கு நிகரான தொழிலையும் எதிர்பார்க்கிறீர்களா? காலத்தை வீணடிக்காது நன்கு உழைத்துச் சமூகத்திலே முன்னேற வேண்டுமா?
கவலையை விடுங்கள் இன்றே எம்மிடம் விரையுங்கள்....
நீங்கள் குறுகிய காலத்தில் பின்வரும் கற்கை நெறிகளைப் பெற்றுக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் உங்களை நாடி வந்திருக்கின்றது.

100% விசா உத்தரவாதம்

Pre. MBA (Master of Business Administration)
To whom : Degree holders, non business degree holders HNDA, HNDM (Advanced Technical Institute)

Final Degree (Top Up) MBA in UK
Course Duration: 9 Months

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½Years Diploma & Degree @ London (UK), USA, Canada, Australia, Newzealand

Foundation Diploma in Hospitality Management
Foundation Diploma in Nursing (Health & Social Care)
6 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia

Foundation Diploma in Management
Foundation Diploma in Human Rights & Principles of laws
3 Months — Diploma & Degree @ UK, Canada, USA, Newzealand & Australia

இவ்வாறான பயிற்சி நெறிகளுக்கு 100% நல்ல வேலைவாய்ப்பு வெளிநாடுகளில் உண்டு

இவ் அடிப்படை நெறிகளைக் கற்பதினால் வெளிநாடுகளில் கற்கை நெறிகளை இலகுவாகக் கற்க முடியும்

IELTS (International English Language Testing System)
We guarantee minimum band 6.0 Upwards
அனுபவ விரிவுரையாளர்கள் மூலம் புதிய நவீன முறைக்கமையவும் Audio, Video Visuals ஊடாகக் கற்பிக்கப்படுகிறது.

Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது

Spoken English With Grammar - 1 Month (Quick Learning Course)
Spoken English - 3 Months
Diploma In English - 6 Months
Advanced Diploma In English - 4 Months

விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பயிற்சிகள், இலகு விளக்கங்களுடன் மாணவர்கள் எளிதாகக் கற்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

உங்களின் பட்டப்படிப்புச் சம்பந்தமான கற்கைநெறி வழிகாட்டுதல்களுக்கு இத்துறையிலே மிக அனுபவம் வாய்ந்த எமது சட்டத் தரணிகள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள்.

Courses' Commence on:
11.12.2010, 14.12.2010, 18.12.2010 — காலை : 10.00மணி, மாலை : 03.00மணி

மேலதிக விபரங்களுக்கு :
BRITISH COLLEGE OF HIGHER STUDIES (BCHS)
Tel : 021 222 4550,
Hot lines : 077 7222422, 071 4299935 E-mail : info@bchs.lk
No.15, Sirambiyadi Lane, (off Stanley Road), Jaffna.



Uduvil Girls' College
Invites
Parents, Past Pupils and Well Wishers to its Prize Day
on
Saturday, December 04, 2010, 1.30 p.m.
Chief Guest: Selvy Thiruchandran Ph.D,
Director, Women's Education & Research Centre, Colombo
Faculty, Graduate Studies, University of Colombo
Principal, Staff & Students.



மாபெரும் விலைக்கழிவு LED, LCD

3வருட உத்தரவாதம்.




இச்சலுகை குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே..
H.Disk 320, 500 GB மிகக் குறைந்த விலையில்
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களிற்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
NALIN Information Technologies Pvt Ltd
195/4, PARAMESWARA JUNCTION.
T.P: 0212221166, 0777667974.



Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117


### மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை தங்கம்மா



இருபாலை முனி கோயிலடியைப் பிறப் பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப் பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை தங்கம்மா அவர்கள் நேற்று (03.12.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி லேன்,
கொக்குவில்.

தகவல்:
துரைரத்தினம், ஜெசிந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.